Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 28.04.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

தேதி : 28.04.2026 - செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

***தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, சிக்கிம் மாநிலத்தில், இன்று, 4 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடக்கி வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் உரையாற்றினார்.

பயங்கரவாதம் எந்த வடிவத்தில் வந்தாலும், அதை எதிர்கொள்வதற்கு உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியம் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தி உள்ளார்.

செமி கண்டக்டர் உற்பத்தி, செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளில் நாடு விரைவான முன்னேற்றங்களை கண்டு வருவதாக, மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் அடுத்த மாதம் 17ஆம் தேதி முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027-ன் முதல்கட்டப் பணிகள் தொடங்க உள்ளதாக, மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் தெரிவித்துள்ளார்.

***மோடி சிக்கிம் -1 (15)***

கிழக்கின் சொர்க்கமாக விளங்கும் சிக்கிம் மாநிலத்தின் உள் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு மத்திய அரசு முன்னுரிமை அளித்துள்ளதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். சிக்கிம் மாநிலத்தின் 50ஆம் ஆண்டு தின விழாவில் இன்று கலந்து கொண்ட, பிரதமர் திரு. நரேந்திர மோடி, 4 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடக்கி வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் உரையாற்றினார். அப்போது, சிக்கிமில் சுற்றுலா வாய்ப்புகள் மிகுதியாக இருப்பதாகவும், அதனை மேம்படுத்துவதன் மூலம் அம்மாநில மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்கு மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாகவும் கூறினார்.

மாநிலத்தில் புதிய விரைவுச் சாலைகள் அமைக்கப்படுவதன் மூலம் சுகாதாரம், கல்வி, நகர்ப்புற வளர்ச்சி, சுற்றுலா மற்றும் வேளாண்மை உள்ளிட்ட துறைகள் மேலும் உத்வேகம் பெறும் என்றும், இதன் மூலம் மாநிலத்தின் ஒருங்கிணைந்த வளர்ச்சி மேம்படும் என்றும் தெரிவித்தார். சிக்கிமின் இயற்கை விவசாயத்தின் வெற்றி நாடு முழுவதற்கும் முன்மாதிரியாக திகழ்கிறது என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

***மோடி சிக்கிம் - 2 (5)***

குறைந்த செலவில் சுகாதாரச் சேவைகளை வழங்குவதில் அரசு முனைப்பு காட்டி வருவதாக தெரிவித்த பிரதமர், ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின்கீழ், ஏழைகளுக்கும், 70 மற்றும் அதற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கும் தரமான இலவச சிகிச்சை பெறும் வகையில், ஆயுஷ்மான் பாரத் அட்டைகள் வழங்கப்பட்டு வருவதாக தெரிவித்தார். பிரதமரின் உரை குறித்த ஒரு செய்தித் தொகுப்பு…

**(வாய்ஸ்)**

***மோடி சிக்கிம் - 3 (12)***

**(வாய்ஸ்)**

சிக்கிம் இளைஞர்கள் கால்பந்து, குத்துச்சண்டை மற்றும் வில்வித்தை போன்ற விளையாட்டுக்களில் தேசிய மற்றும் சர்வதேச அளவில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தி வருவதாக தெரிவித்த பிரதமர், கேலோ இந்தியா மற்றும் ஃபிட் இந்தியா இயக்கம் போன்ற முன்னெடுப்புகள் இளைஞர்களின் திறமையை வளர்த்துக்கொள்ள அளப்பரிய வாய்ப்புகளை வழங்குவதாகக் கூறினார்.

சிறப்பான முறையில் சிக்கிம் தூய்மையை கடைபிடித்து வருவதாக பிரதமர் பாராட்டினார். வடகிழக்கு பகுதிகளை நாட்டின் அஷ்டலக்ஷ்மி என்று குறிப்பிட்ட பிரதமர் திரு. மோடி, இப்பகுதிகளில்

செயல்படுத்தப்படும் திட்டங்களால் மக்களின் வாழ்க்கைத் தரம், குறிப்பிடத்தக்க அளவில் மாற்றம் பெறும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் சிக்கிம் ஆளுநர் திரு. ஓம் பிரகாஷ் மாத்தூர், முதலமைச்சர் திரு. பிரேம் சிங் தமாங், அம்மாநில அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

***ராஜ்நாத் சிங் -1 (16)***

பயங்கரவாதம் எந்த வடிவத்தில் வந்தாலும், அதை எதிர்கொள்வதற்கு உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியம் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தி உள்ளார்.

கிர்கிஸ்தானின் பிஷ்கெக் நகரில் இன்று நடைபெற்ற ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் பேசிய அவர், சர்வதேச அளவில் நிலவும் நிச்சயமற்ற சூழலை எதிர்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று குறிப்பிட்டார். மேலும், பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில் ஒருங்கிணைந்து செயல்படுவதன் முக்கியத்துவம் குறித்து வலியுறுத்திய திரு. ராஜ்நாத் சிங், ஒரு நாட்டின் இறையாண்மைக்கு எதிராக தாக்குதல்

நடத்தும் எல்லைத் தாண்டிய பயங்கரவாதத்திற்கு, எந்த நாடும் ஆதரவு அளிக்கக் கூடாது என்று கூறினார்.

பஹல்காமில் நடைபெற்ற கொடூரமான பயங்கரவாத தாக்குதலில், பாதிக்கப்பட்டவர்கள் குறித்து நினைவு கூர்ந்த அவர், **ஆபரேஷன் சிந்தூர்** நடவடிக்கையின்போது, பயங்கரவாதிகள் நியாயமான தண்டனையில் இருந்து தப்ப முடியாது என்ற தனது உறுதியான தீர்மானத்தை இந்தியா வெளிப்படுத்தியதாக திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

***ராஜ்நாத் சிங் - 2 (9)***

உலக நாடுகளிடையே பொதுவான நோக்கம் குறைந்து, சுயநல நோக்கம் அதிகரித்து வரும் இன்றைய சூழலில், ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது என்றார். ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் கலந்தாய்வுகள் பொதுவான பாதுகாப்பு சவால்கள் குறித்த புரிதலை மேம்படுத்தும் என்றும், பாதுகாப்புத் துறையின் எதிர்கால ஒத்துழைப்பிற்கான புதிய வழிகளை ஆராயும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் முடிவுகளை செயல்படுத்துவதில் ஆக்கப்பூர்வமாக பங்களிக்க இந்தியா உறுதியுடன் உள்ளதாகவும் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

*நிதின் கட்கரி (17)*

விரைவான, பாதுகாப்பான மற்றும் சுற்றுச் சூழலுக்கு உகந்த போக்குவரத்து முறைகளை ஊக்குவிக்கும் வகையில், நாடு முழுவதும் 36 பசுமை விரைவு நெடுஞ்சாலைகள் உருவாக்கப்பட்டு வருவதாக, மத்திய சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் துறை அமைச்சர் திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

புதுடெல்லியில் இன்று நடைபெற்ற பேருந்து போக்குவரத்து குறித்த மாநாட்டில் உரையாற்றிய அவர், நாட்டின் போக்குவரத்துத் துறையின் கவனம் இனி, செலவுகள் சார்ந்த தாக மட்டுமில்லாமல், தரம் மற்றும் வசதி ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு அமைய வேண்டும் என்றார். நாடு முழுவதும் நெடுஞ்சாலைகள் உயர்தர நிலையில் மேம்படுத்தப்பட்டதன் விளைவாக, பயண நேரம் கணிசமாக குறைந்துள்ளதுடன், போக்குவரத்தின் தன்மையும் மேம்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். டெல்லியில் இருந்து டேராடூனுக்குச் செல்ல முன்பு 8 மணி முதல் 9 மணி நேரம் வரை இருந்த பயண நேரம், இப்போது 2 மணி நேரமாக குறைந்துள்ளது என்றார். மேலும், நாட்டு மக்களுக்கு பாதுகாப்பான நவீன வசதிகளுடன் கூடிய பயண அனுபவங்களை வழங்க இந்தியா தனது போக்குவரத்து அமைப்புகளை உலக தரத்திற்கு இணையாக மேம்படுத்த வேண்டியது அவசியம் என்றும், திரு. நிதின் கட்கரி தெரிவித்துள்ளார்.

*அஸ்வினி வைஷ்ணவ் -1 (18)*

செமி கண்டக்டர் உற்பத்தி, மேம்பட்ட சிப் வடிவமைப்பு, செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளில் நாடு விரைவான முன்னேற்றங்களை கண்டு வருவதாக, மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார். ஆந்திரப் பிரதேச முதலமைச்சர் திரு. சந்திரபாபு நாயுடுவுடன் இணைந்து, விசாகப்பட்டினத்தில், Google Cloud India AI மையத்திற்கு இன்று அடிக்கல் நாட்டினார். அப்போது உரையாற்றிய அவர், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் மேக் இன் இந்தியா தொலைநோக்குப் பார்வையின் கீழ், நம்பகமான உலகளாவிய மின்னணு உற்பத்தி கேந்திரமாக இந்தியா வேகமாக வளர்ந்து வருகிறது என்று தெரிவித்தார்.

கடந்த காலங்களில், மின்னணு உற்பத்தி, செமி கண்டக்டர் மற்றும் Hardware ஆகியவற்றில் இந்தியா வாய்ப்புகளை தவறவிட்டது என்றும், ஆனால் தற்போது, இத்துறைகளில் கவனம் செலுத்தியதன் காரணமாக குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்தியாவில் இருந்து ஸ்மார்ட் போன்கள் வேறு எந்தப் பொருட்களையும் விட அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுவதாக தெரிவித்த அவர், இது மின்னணு உற்பத்தி மற்றும் உலகளாவிய விநியோகச் சங்கிலியில் நமது நாட்டின் வளர்ந்து வரும் வலிமையை பிரதிபலிக்கிறது என்று தெரிவித்தார்.

***அஸ்வினி வைஷ்ணவ் – 2 (11)***

விசாகப்பட்டினத்தை நாட்டின் வளர்ந்து வரும் செயற்கை நுண்ணறிவின் மையம் என்று தெரிவித்த திரு. அஸ்வினி வைஷ்ணவ், விரைவில் இந்நகரம் AI பட்டனம் என்று பரவலாக அறியப்படும் எனவும் கூறினார். விசாகப்பட்டினத்தில் அமைக்கப்பட்டுள்ள செயற்கை நுண்ணறிவு மையமானது இந்தியா, ஐரோப்பா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, மத்திய கிழக்கு மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு இடையேயான டிஜிட்டல் இணைப்பை வலுப்படுத்தும் என்றும், திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மத்திய விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ராம்மோகன் நாயுடு, மத்திய இணையமைச்சர்கள் திரு. பெம்மசானி சந்திரசேகர், திரு. சீனுவாச வர்மா, ஆந்திரப் பிரதேச மாநில அமைச்சர்கள், பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த தலைவர்களும் கலந்து கொண்டனர்.

***புதுச்சேரி கணக்கெடுப்பு -1 (7)***

புதுச்சேரியில் அடுத்த மாதம் 17ஆம் தேதி முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027-ன் முதல்கட்டப் பணிகள் தொடங்க உள்ளதாக, மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், மே 17ஆம் தேதி முதல் 31ஆம்

தேதி வரை நடைபெறும் சுய கணக்கெடுப்புப் பணியில், பொதுமக்கள் தாங்களாகவே முன்வந்து se.census.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்யலாம் என்று தெரிவித்துள்ளார். இது குறித்த ஒரு செய்தித் தொகுப்பு…

(வாய்ஸ்)

***புதுச்சேரி கணக்கெடுப்பு -2 (18)***

(வாய்ஸ்)

மக்கள் தொகை கணக்கெடுப்பு – 2027இன் முதல் கட்டமாக வீட்டுப் பட்டியல் மற்றும் வீட்டு கணக்கெடுப்புப் பணி நடைபெற உள்ளது குறித்து மாவட்ட ஆட்சியர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், வரும் ஜூன் 1ஆம் தேதி தொடங்கி 30ஆம் தேதி வரை, நேரடியாக வீடுதோறும் சென்று கணக்கெடுக்கும் பணி, நடைபெறும் என்று தெரிவித்துள்ளார்.

கணக்கெடுப்பு அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று, குடிநீர், மின்சாரம், இணையவசதி உள்ளிட்ட 33 வகையான அடிப்படைத் தகவல்களை சேகரிப்பார்கள் என்றும், தவறான தகவல் அளிப்பது அல்லது ஒத்துழைக்க மறுப்பது தண்டனைக்குரிய குற்றம் என்றும் மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். மக்கள் வழங்கும் தகவல்கள் அனைத்தும், ரகசியமாக வைக்கப்படும் என்றும், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த

இப்பணிக்கு, பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும், மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் கேட்டுக்கொண்டுள்ளார்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு என்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பணியாகும். இதில் சேகரிக்கப்படும் தகவல்கள், திட்டமிடல், கொள்கை வடிவமைப்பு, நாடாளுமன்றம், சட்டமன்றம் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தொகுதி வரையறை மற்றும் ஒதுக்கீடு போன்ற செயல்பாடுகளில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

***மேற்கு வங்கம் (18)***

மேற்கு வங்க மாநில சட்டமன்றத் தேர்தலுக்கான இரண்டாம் கட்ட மற்றும் இறுதிக் கட்ட வாக்குப் பதிவு நாளை நடைபெறுவதையொட்டி, விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அம்மாநிலத்தின் 142 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கான வாக்குப் பதிவு நாளை காலை 7 மணிக்குத் தொடங்கி மாலை 6 மணி வரை நடைபெறுகிறது. இதில் 3 கோடியே 20 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். 220 பெண் வேட்பாளர்கள் உட்பட ஆயிரத்து 448 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர்.

வாக்குப் பதிவை அமைதியான முறையில் நடத்தும் வகையில், 2 ஆயிரத்து 321 கம்பெனி மத்திய படைகள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இவர்களுடன் 142 பொதுப் பார்வையாளர்கள்,

95 காவல்துறை பார்வையாளர்கள், மற்றும் 100 தேர்தல் செலவினப் பார்வையாளர்கள் ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நாளை நடைபெறும் வாக்குப் பதிவில் 41 ஆயிரம் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 8 ஆயிரத்து 845 வாக்குச் சாவடிகள் முழுவதும் பெண்களால் நிர்வகிக்கப்படுகிறது. இதற்கிடையே கடந்த 23ஆம் தேதி நடைபெற்ற முதல் கட்டத் தேர்தலில் வாக்குப் பதிவு 93.19 சதவிகிதத்தை எட்டி புதிய சாதனை படைத்துள்ள நிலையில், நாளைய வாக்குப் பதிவு இதைவிட அதிகமாக இருக்கும் என்று தேர்தல் ஆணையம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

***AFC – ஆசிய கோப்பை (12)***

சீனாவில் அடுத்த மாதம் நடைபெறும் 17 வயதுக்கு உட்பட்ட AFC மகளிர் ஆசிய கோப்பை போட்டியில் பங்கேற்பதற்காக இந்திய மகளிர் அணி அந்நாட்டிற்குச் சென்றுள்ளது. 21 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ள இந்திய அணி, B பிரிவில் அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 2ஆம் தேதி தனது முதல் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவை எதிர்த்து விளையாடுகிறது. அதனைத் தொடர்ந்து மே 5ஆம் தேதி ஜப்பானுடனும், மே 8ஆம் தேதி லெபனானுடனும் விளையாடுகிறது.

இந்தியா பங்கேற்கும் அனைத்துப் போட்டிகளும் சீனாவின் சுசோ தைஹூ கால்பந்து விளையாட்டு மையத்தின் மைதானங்களில் நடைபெறுகிறது. காலிறுதிப் போட்டிகளில் வெற்றி பெறும் 4 அணிகள், இந்த ஆண்டு மொரோக்கோவில் நடைபெற உள்ள 17 வயதுக்கு உட்பட்ட FIFA மகளிர் உலகக் கோப்பை போட்டிக்குத் தகுதி பெறும்.

***வானிலை (6)***

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள், தென் தமிழக கடலோர மாவட்டங்கள் மற்றும் டெல்டா மாவட்டங்களின் கடலோர பகுதிகளிலும், காரைக்காலின் ஒருசில இடங்களிலும், இன்றும் – நாளையும் இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தின் ஏனைய பகுதிகளிலும், புதுச்சேரியிலும் வறண்ட வானிலையே நிலவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த 4 நாட்களுக்கு தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் இயல்பை விட 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை உயரக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

பிரதமர் திரு. நரேந்திர மோடி, சிக்கிம் மாநிலத்தில், இன்று, 4 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு திட்டங்களை தொடக்கி வைத்தும், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும் உரையாற்றினார்.

பயங்கரவாதம் எந்த வடிவத்தில் வந்தாலும், அதை எதிர்கொள்வதற்கு உலக நாடுகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியது அவசியம் என்று மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் வலியுறுத்தி உள்ளார்.

செமி கண்டக்டர் உற்பத்தி, செயற்கை நுண்ணறிவு போன்ற துறைகளில் நாடு விரைவான முன்னேற்றங்களை கண்டு வருவதாக, மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் அடுத்த மாதம் 17ஆம் தேதி முதல் மக்கள் தொகை கணக்கெடுப்பு 2027-ன் முதல்கட்டப் பணிகள் தொடங்க உள்ளதாக, மாவட்ட ஆட்சியர் திரு. குலோத்துங்கன் தெரிவித்துள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. BI / MS / RK